சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந. க.எண் 1162 /அ5/2024 நாள்4.6.2024

பொருள் சென்னை மாவட்டம் , போட்டித்தேர்வுகள் குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV பதவிகளுக்கான எழுத்துத்தேர்வு 09.06.2024 அன்று நடைபெறுதல். ஆயத்த கூட்டம் 5.06.2024 நடைபெறுதல் அனைத்து முதன்மைக்கண்காணிப்பாளர்கள் கலந்து கொள்ளுதல் சார்ந்து

பார்வை சென்னை-03 தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலரின் கடித 269/ID-A12024 நாள் 7.02.2024

பார்வையில் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலரின் கடிதத்தின்படி குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV பதவிகளுக்கான எழுத்துத்தேர்வு 09.06.2024 அன்று நடைபெறுகின்றன, நடைபெறும் தேர்வுக்கு முதன்மைக்கண்காணிப்பாளர்கள் தங்கள் தேர்வுகூடத்தில் தேர்வர்களுக்கு போதுமான இருக்கை வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும், துறை அலுவலர், அறைக்கண்காணிப்பாளர் எழுத்தர், பெருக்குபவர், அலுவலக உதவியாளர் போன்ற பணியாளர்கள் தேவையான எண்ணிக்கையில் அனைவரும் பணியில் இருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ள நடைமுறைகளை பின்பற்றி தேர்வுகள் நடத்தப்படவேண்டும், தேர்வு நடைபெறும் நாளில் பாதுகாப்பிற்கு காவலர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தேர்வர்களுக்கு தேவையான குடிதண்ணீர் வசதி கழிவறை வசதிகள் ஏற்படுத்தப் படவேண்டும் தடையற்ற மின்சார வசதி கோரி அருகில் உள்ள மின் நிலையத்தில் தகவல் அளிக்க வேண்டும், தேர்வு அறைகள் சுகாதாரம் மற்றும் தூய்மையாகவும் வைத்திருக்கவேண்டும்.

மேலும் தேர்வு சம்மந்தமாக தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு ஆயத்த கூட்டம் 05.06.2024 அன்று காலை 10.00 மணி மற்றும் மதியம் 2.00 மணிக்கும் இரண்டு பிரிவுகளாக சென்னை -03. பிராட்வே, வ.உ.சி நகர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறுகின்றன. நடைபெறும் கூட்டத்திற்கு அனைத்து முதன்மைக் கண்காணிப்பாளர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | கூட்டம் நடைபெறும் இடம் | நாள் மற்றும் நேரம் |
|---|---|---|
| 1 | **தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அலுவலகம், வ.உ.சி நகர் பிராட்வே, சென்னை -03** | 05.06.2024 **காலை 10.00 மணி மற்றும் மதியம் 2.00 மணி** இரண்டு பிரிவுகளாக |

எனவே அனைத்து முதன்மைக்கண்காணிப்பாளர்களும் எவ்வித புகாருக்கும் இடமின்றி தேர்வுகள் சிறப்பாக நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு தேர்வுக்கூடங்களின் விவரம்

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1 அனைத்து தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் / முதன்மைக்கண்காணிப்பாளர்

நகல்

2அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.